1986 நவம்பர் 25]

(முற்பகல் 9.20)

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டிலாவது இந்தப் பிரச்சினை பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே செங்கல்பட்டு மாவட்டத்தில் படாளத்திலும், மதுராந்தகத்திலும், திருத்தணிக்கு அருகிலுள்ள திருவாலங்காட்டிலும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. தாம்பரம் பகுதியில் சர்க்கரை உற்பத்தி செய்கின்ற கரும்பு சாகுபடி இல்லை. ஆகவே, தற்போது தாம்பரம் பகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கின்ற உத்தேசம் அரசிடம் இல்லை.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் எத்தனை சர்க்கரை ஆலைகள் இயங்குகின்றன? குறிப்பாக கூட்டுறவுத் துறையில் எந்த வழிக்காட்டிக் கொள்கையின்கீழ் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் அமைக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கூட்டுறவுத் துறையின் கீழ் 11 சர்க்கரை ஆலைகளும், பொதுத் துறையின்கீழ் 3 சர்க்கரை ஆலைகளும், தனியார் துறையின்கீழ் 10 சர்க்கரை ஆலைகளும் இயங்கிக் கொண்டு வருகின்றன. தற்போது தஞ்சை மாவட்டத்திலுள்ள மயிலாடுதுறையில் தலைஞாயிறு என்ற இடத்தில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கப்பட்டு வருகிறது.

நகராட்சிப்பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்குதல்.

171—(*வினா எண். 3467) திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் மற்றும் திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக 1-6-1981-ல் ஆக்கப்பட்டது போல் நகராட்சிப் பள்ளியில் பணிபுரிபவர்களுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி, நகரியம் மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் அனைவரையும் 1-6-86 முதல் அரசு ஊழியர்களாக ஆக்க அரசு, ஆணை பிறப்பித்துள்ளது. (அரசாணை எண் 702, கல்வி, நாள் 23-5-1986.)

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு துணைக் கேள்வி கேட்க முடியாத அளவுக்கு காலதாமதமாக பதில் வந்துள்ளதால் துணைக் கேள்வி கேட்க முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவ்வினா 16-6-1986 அன்று போடப்பட்டது. 9-9-1986 அன்று தான் அதனுடைய விடை துறைக்கு வந்திருக்கிறது.

Foot ball stadium at Madras.

172—(* Q. No. 3977)—**THIRU G. ANANTHA KRISHNA:** Will the Hon. the Minister for Education and Law be pleased to state—

(*a*). Whether the Government has abandoned the programme to build a stadium for staging foot ball matches in Madras City ; and

(*b*) if not, what are the steps taken for constructing a foot ball stadium.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சென்னையில் கால்பந்து விளையாட்டிற்கென நேரு விளையாட்டு அரங்கம் உள்ளது. கடந்த 1984-ம் ஆண்டு சந்தோஷ் கோப்பைக்கான கால்பந்து போட்டிகள் இங்கு நடத்தப்பட்டன. பன்னாட்டு அழைப்பு நேரு தங்கக் கோப்பைக்கான கால்பந்து போட்டிகள் நடத்துவதற்கென சென்னையில் கால்பந்து விளையாட்டு அரங்கம் கட்டும் செயற்குறிப்பு தற்போதுள்ள நிதிநிலை நெருக்கடியின் காரணமாக கைவிடப்பட்டது.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் இன்டோர் ஆடிட்டோரியம் அமைப்பதாகவும், தமிழ்நாடு கூடைப்பந்து வளர்ச்சிக் கழகத்திடம் அதை ஒப்படைக்கப் போவதாகவும் ஏற்கெனவே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லியிருந்தார்களே, அந்தச் செயற்குறிப்பு கைவிடப்பட்டதா? இல்லையெனில் அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நுங்கம்பாக்கம் மனமகிழ் மையத்திடம் உள்ள மைதானம் மற்றும் தரமணி ஆகிய இடங்களில் புதிதாக அரங்கம் கட்டலாம் என்ற செயற்குறிப்புதான் இருக்கிறது. ஏனெனில் தற்போது இருக்கின்ற நேரு விளையாட்டு அரங்கமே போதும் என்பதால்தான் அது குறித்து நடவடிக்கை எடுக்கவில்லை.